No:56:05 Price: Rs.10.00

Herald of Deliverance
விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

MAY 2012

பெந்தெகொஸ்தே நாள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை...

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

என் இதயங்கனிந்த வாழ்த்துதல்கள்.

கோடை வெயிலின் கொடிய வெப்பத்தை நாம் இம்மாதம் சந்திக்கவிருக்கிறோம். "நிழலின் அருமை வெயிலில் சென்றால்தான் தெரியும்" என்பது முதுமொழி. ஆம், இந்தியாவின் கொடிய இவ்வேனிற்காலத்தைக் கழிக்க, மக்கள் கோடை வாசஸ்தலங்களுக்குச் சென்று, இளைப்பாறி, குளிர்ச்சியின் இனிமையைப் பெற்றுக்கொள்வது இயல்பு.

பள்ளிச் சிறார்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் மே மாதம் விடுமுறை நாட்கள். பெற்றோர்களும் பிள்ளைகளுமாக இவ்விடுமுறை நாட்களைக் கழிக்க, குளிர்ந்த மலைவாழ்பகுதிகளுக்குச் செல்ல முற்படுவது நன்மை பயக்கும். விசுவாசிகளுக்கு ஊழியர்களுக்குங்கூட இந்த இளைப்பாறுதல் அவசியமே.

கோடை வாசஸ்தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், சிம்லா, டார்ஜிலிங் போன்ற இந்தியாவின் மலைவாழ் இடங்களுக்குச் சென்று கொடிய கோடையைச் செலவிடுவது அவசியமெனினும், "**சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு;...**" (2 தீமோத்தேயு 4:2) என்றுள்ள வேதவாக்கைப் பற்றிப்பிடித்து, செல்லுமிடங்களிலெல்லாம் சுவிசேஷத்தை அறிவிப்பது, கைப்பிரதிகளை விநியோகிப்பது போன்றவை, தேவ பிள்ளைகளின் மிகமிக இன்றியமையாத கடமைகளாகும்.

"**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்**" (1 தீமோத்தேயு 2:4) என்று வேதம் கூறுகிறது. ஆகவே, தேவ பிள்ளைகள் இந்நாட்களில் மெத்தனமாக ஜீவிப்பது சரியல்ல. அழிந்துபோகிற ஆத்துமாக்களை இரட்சிக்க, கோடை வாசஸ்தலங்களில் சுவிசேஷ கூட்டங்களை ஒழுங்கு செய்து, சுவிசேஷம் அறிவிக்க முனைந்து காணப்படவேண்டும். "**நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்**" (சங்கீதம் 90:12) என்று ஜெபிக்கிறார் மோசே.

ஆம், நமது நாட்கள் ஒரு புகையைப்போலச் சீக்கிரத்தில் மறைந்துபோகும் தன்மையுடையது. விசுவாசிகள் ஞானமுள்ள இருதயத்தைப் பெற்று, காலத்தைப் பிரயோஜனப்படுத்தி, ஆங்காங்கே ஒடுக்கக்கூட்டங்களை (Retreat) ஏற்படுத்தி, தங்களையும், தங்களது பிள்ளைகளையும் பரிசுத்தப்படுத்தி, தேவனைச் சந்திக்க ஆயத்தப்படவேண்டும்.

"**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்**" (எபேசியர் 5:16) என்று பவுலடியார் கூறுவது, விசுவாசிகளுக்கோர் எச்சரிப்பாய் அமையட்டும். கொடிய கோடை நாட்கள் புறஜாதியாரிடையே இனிய இரட்சிப்பை உண்டாக்கட்டும்.

இக்கோடை நாட்கள் சுவிசேஷம் அறிவிக்கும் இனிய நாட்களாய் அமைய, கர்த்தர்தாமே உங்களுக்கு உதவிசெய்வாராக.

அன்புள்ள

R. K. Sam...

பெந்தெகொஸ்தே நாள்

போதகர் எம் கே. சாம் சுந்தரம்

இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாள், அவர் சிலுவையில் மரித்த நாள், அவர் உயிரோடு எழுந்த நாள் இவற்றைக் கிறிஸ்தவ உலகம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றதுபோல, அவர் பரமேறிச் சென்ற ஐம்பது நாட்களுக்குப் பின்பு, தமது சீடர்களின்மேல் பரிசுத்த ஆவியைப் பொழிந்தருளின நாளையும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. அந்த நாள் பெந்தெகொஸ்தே நாள் என்று அழைக்கப் படுகின்றது. கீழ்வரும் செய்தியிலே பெந்தெ கொஸ்தே நாளைக் குறித்து விவரமாய்க் காண்போம்.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் 2 ஆம் அதிகாரம் 1 முதல் 4 வரை உள்ள வசனங்களை வாசித்தறியவும்.

இவ்வதிகாரத்தின் முதலாம் வசனம், *"பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது"* என்று துவங்குகின்றதைக் காண்க. பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் இப்பண்டிகை ஆசரிக்கப் பட்டு வந்ததுகுறித்து, லேவியராகமம் 23 ஆம் அதிகாரத்தில் 10 முதல் 16 வசனங்களில் காணலாம்.

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசமாகிய கானானுக்குள் இஸ்ரவேலர் பிரவேசித்தபின்பு, அதின் வெள்ளாண்மையை அனுபவிக்கும் ஐம்பதாவது நாள், தேவனுக்குப் பண்டிகை கொண்டாடும் நாளாக அமைய வேண்டும் என்று தேவன் மோசேக்குப் பணித்திருந்தார்.

அறுவடையின் முதற்பலனான கதிர்க் கட்டு கர்த்தருடைய சந்நிதியில் அங்கிகரிக்கப் படும்படி, ஓய்வுநாளுக்கு மறுநாளில் ஆசாரியன் அதனை அசைவாட்டவேண்டும். அந்த ஓய்வுநாளின் மறுநாள்முதல் எண்ணத்துவங்கி, ஏழுவாரங்கள் முடியவேண்டும். அந்த ஏழு வாரங்கள் முடியும்போது, 49 நாட்கள் நிறைவு பெறும். ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாள் ஐம்பதாவது நாளாகக் கணக்கிடப்படும். அந்த ஐம்பதாவது நாள் இஸ்ரவேலருக்கு ஒரு விசேஷ பண்டிகை கொண்டாடும் நாளாகக் காணப் படும் என்று தேவன் மோசேயிடம் கூறினார். அந்த ஐம்பதாம் நாளிலே சகல இஸ்ரவேலரும் ஒன்றாகக்கூடி தேவசந்நிதியில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் தேவன் கட்டளையிட் டிருந்தார்.

இந்த ஐம்பதாவது நாள் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறு தலின் நாளாக, அதாவது, புதிய ஏற்பாட்டின் பெந்தெகொஸ்தே நாளாக அமைந்துள்ளது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்து கணக்கிட்டுப் பார்க்கும்போது பெந்தெகொஸ்தே நாள் என்று கூறப்படும் அந்த நாள் ஐம்பதாவது நாளாகக் காணப்படுகின்றது. இந்த ஐம்பதாம் நாளிலேதான் இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களின்மீது உன்னதத்திலிருந்து பரிசுத்த ஆவியை ஊற்றினார். அவர்கள் அன்று பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அந்நியபாஷை களில் பேசத் துவங்கினர்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அறுவடையின் முதற்பலன் என்பது, மரணத்தி லிருந்து உயிரோடெழுந்த முதற்பலனான இயேசுவுக்கு அடையாளமாகும். 1 கொரிந்தியர் 15:20 இல், *"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந் தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பல னானார்"* என்று கூறப்பட்டுள்ளது, இதனை உறுதிப்படுத்துகின்றது.

நாம் அந்நாளுக்கு முக்கியத்துவம்

கொடாது. அந்நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தியானிப்பது ஏற்புடையது. நாட்களைச் சரியாகக் குறிப்பிட முடியாமற்போனாலும், அந்நாளின் நிகழ்ச்சியை மறுக்கவும், மறக்கவும் முடியாது. இந்தப் பெந்தெகொஸ்தே நாளை இன்று உலக முழுவதும் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகின்றனர்.

அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரம் 1 முதல் 4 வரையுள்ள வசனங்களை மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பொருள்கொள்ளுவோமாக. அவை: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவதற்குரிய எதிர்பார்ப்பு, அப்போது நாம் பெற்றுக்கொள்ளும் அநுபவங்கள், அதனைப் பெற்றுக்கொண்டதின் அடையாளங்கள் என்பன.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவதற்குரிய எதிர்பார்ப்பு

"ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" (அப்போஸ்தலர் 1:5).

இயேசு கிறிஸ்து தாம் உயிர்த்தெழுந்து பரமேறும்போதும் சீஷர்களை நோக்கி, *"... நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்"* (லூக்கா 24:49) என்று முன்னரே கூறியிருந்ததால், சீஷர்கள் ஏறக்குறைய நூற்றிருபதுபேரும் எருசலேம் நகரத்தில் மேல்வீட்டறையில் ஒருமனப்பட்டு, உன்னதத்தின் பெலனாகிய அந்தப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவதற்காகக் காத்திருந்தனர். தேவன் வாக்குப் பண்ணியிருந்த அந்தப் பரிசுத்த ஆவியைத் தாங்கள் பெற்றுக்கொள்ளுவதற்காக, எதிர்பார்ப்புடன் அங்குக் காத்திருந்தனர்.

அவ்விதமே அவர்கள் காத்திருந்து, தாங்கள் எதிர்பார்த்திருந்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டனர். நாமோ இன்றைய நாட்களில் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. "ஆண்டவர் எனக்குப் பரிசுத்த ஆவியானவரை இப்போதே தந்தருளுவார்" என்ற விசுவாசத்தோடு கேட்டால், உடன்தானே நாம் பெற்றுக்கொள்ளமுடியும். ஆதி சீஷர்கள் நூற்றிருபதுபேரும் பெந்தெகொஸ்தே நாளன்று தான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். அவர்களது எதிர்பார்ப்பு அன்றுதான் நிறைவேறிற்று.

நாம் இப்போதே விசுவாசத்தோடு கேட்டு அதனைப் பெற்றுக்கொள்ளமுடியும். பரிசுத்த ஆவியானவரை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தேவனிடம் கேட்டு அவரைப் பெற்றுக்கொள்ளுவீர்களாக.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்போது உண்டாகும் அநுபவங்கள்

"அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது" (அப்போஸ்தலர் 2:2,3).

இரண்டாம் வசனத்தில் காணப்படும் *'முழக்கம்'* என்ற சொல் ஆங்கில வேதாகமத்தில் *'sound'* அதாவது, 'சத்தம்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் 2:2,3 வசனங்களில் காணப்படும் பலத்த காற்று முழக்கம், அக்கினிமயமான நாவுகள் என்ற சொற்களின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளுவீர்களாக.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவோம் என்ற எதிர்பார்ப்போடு காத்துக்கொண்டிருந்த சீஷர்கள் மேற்கூறப்பட்ட மூன்று அனுபவங்களைப் பெற்றுக்கொண்டனர். நாமுங்கூட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்போது இவ்வித அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் உண்டாகும்.

பரிசுத்த ஆவியைத் தேவன் அனுப்பிய போது ஒரு முழக்கம் அல்லது சத்தம் உண்டாயிற்றல்லவா? அந்தச் சத்தம் வேத வசனங்களின் அடிப்படையில் இரு அம்சங்களைக் குறிக்கின்றன. அவை: நமது தேவைகள் சந்திக்கப்படுதலையும், சத்துருவின் மேல் நாம் பெற்றுக்கொள்ளும் ஜெயத்தையும் சுட்டிக் காட்டுவன.

"...பெருமழையின் இரைச்சல் (சத்தம்) கேட்கப்படுகின்றது என்றான்" (1 இராஜாக்கள் 18:41). இஸ்ரவேலின் இராஜாவான ஆகாபிடம் எலியா தீர்க்கதரிசி கூறின வாய்மொழிகள் இவை. இந்த இரைச்சல் பரிசுத்த ஆவியானவரது முழக்கத்துக்கு ஒப்பானது. இதனை ஆகாப் கேட்கவில்லை, தீர்க்கதரிசியாகிய எலியாதான் கேட்டான். இஸ்ரவேல் தேசத்தில் மூன்றரை ஆண்டுகளாக மழை பெய்யாமற் போகவே, அந்நாட்டு மக்கள் கொடிய பஞ்சத்தினால் அவதியுற்றனர். வறட்சியினால் மனஞ்சோர்ந்து தளர்ந்து போயினர். தேவ மனிதனான எலியா தான் ஜெபித்ததின் பலனாக, அப்பெருமழையின் இரைச்சலைக் கேட்டான். ஆகாபைத் துரிதமாகத் தன் இருப்பிடம் செல்லுமாறு எச்சரித்தான். இந்தச் சம்பவத்தை யாக்கோபு தமது நிருபத்தில் எழுதியுள்ளார்: *"வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது"* (யாக்கோபு 5:18).

ஆம், பெருமழையின் விளைவாக பூமி நல்ல விளைச்சலைத் தந்தது. மக்களுடைய பல தேவைகளும் நல் அறுவடையினால் சந்திக்கப்பட்டன. இன்று, பல கிறிஸ்தவர்களும் தங்கள் தேவைகள் சந்திக்கப்படாமல் அவதியுறுகின்றனர். காரணம் என்ன? பரிசுத்த ஆவியானவரின் நிறைவு அவர்களுக்குள் இல்லாமையே.

அன்பானவர்களே! எலியா கேட்ட பெருமழையின் இரைச்சல், வானத்திலிருந்து சடுதியாய் உண்டான பரிசுத்த ஆவியானவரது முழக்கத்துக்கு ஒப்பானது. கிறிஸ்தவர்கள் *பரிசுத்த ஆவியானவரின் முழக்கத்தால் நிரப்பப்படும்போது, அவர்கள் வாழ்வில் காணப்படும் கொடிய வறட்சிகள் அனைத்தும் நீங்கும். வாழ்க்கையின் குறைவுகளோடு விசுவாசிகள் போராட வேண்டிய அவசியமிராது. வானத்திலிருந்து ஏற்பட்ட முழக்கத்திற்கு ஒப்பான பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

'முழக்கம்' அல்லது 'சத்தம்' என்பது சத்துருக்களின்மேல் கிடைக்கும் ஜெயத்தையும் காட்டும்.

பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு எதிராக அவ்வப்போது யுத்தஞ்செய்ய எழும்புவது வழக்கமாயிருந்தது. இஸ்ரவேலின் இராஜாவான தாவீது முதன்முறை பெலிஸ்தரைத் துரத்திச் சென்று வெற்றிபெற்றான். இரண்டாம் முறையாக பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு எதிர்த்து வந்தபோது, தாவீது கர்த்தரிடம் ஆலோசனை கேட்டான்.

அப்போது கர்த்தர், *"முசுக்கட்டைச் செடிகளின்... இரைச்சலைக் கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப்போ"* (2 சாமுவேல் 5:24) என்றார். கர்த்தர் கட்டளையிட்டபடி அவன் செய்து எதிரிகளான பெலிஸ்தரை முறியடித்தான். ஆம், பரிசுத்த ஆவியானவரின் முழக்கம் அந்த இரைச்சலுக்கு ஒப்பானது அன்றோ?

அன்பானவர்களே! முழக்கத்தோடு பெற்றுக்கொள்ளும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, உங்கள் சத்துருக்களை முறியடித்து ஜெயம் பெறுங்கள்.

சத்துரு என்று கூறும்போது அது மனிதர்களைக் குறிக்கவில்லை. என்றென்றுமாய் உங்களைத் தொடர்ந்துவரும் சத்துருவான பிசாசைத்தான் அது குறிக்கும். அவன் கிறிஸ்தவ வாழ்வில் உங்களை ஜெயம் பெறவிடாது, உலக ஆசா பாசங்களினாலும், மாமிச இச்சைகளினாலும் உங்களை விழத் தள்ளுவானன்றோ? அவனை அடியோடு முறியடிக்க, ஜெயித்து வீழ்த்த, நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிரம்பி வாழவேண்டும்.

உன்னதத்திலிருந்து பெரு முழக்கத்தோடு இறங்கும் பரிசுத்த ஆவியைத் தேவனிடம் வேண்டிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அடுத்து, பரிசுத்த ஆவியானவர் பலத்த காற்றுக்கு ஒப்பிடப்பட்டுள்ளதை அப்போஸ்தலர் 2:2 இல் காண்கிறோம். இக்காற்றும் இரு அம்சங்களைச் சுட்டுகின்றது. அவை: வாழ்வதற்கான சுதந்தரம், வாழ்வதற்கான ஆகாரம் ஆகும்.

நோவா வாழ்ந்த காலத்திலே பெரு மழையினால் வெள்ளப்பெருக்கு உண்டாகி, பூமி முழுவதும் தண்ணீரினால் அமிழ்ந்து போயிற்று. நோவாவின் பேழைமாத்திரம் அத்தண்ணீரில் மிதந்துகொண்டிருந்தது. நோவா குடும்பத்தார் தரையிலே வந்து இறங்கி, வாழ்வதற்கான சுதந்தரத்தை அப்போது பெற்றிலர். கூண்டுக்குள் அடைபட்டிருந்த கிளியைப்போல, பேழைக்குள் அடைபட்டிருந்தனர்.

தேவன் நோவாவையும், அவனுடனே பேழையிலிருந்த அனைத்தையும் நினைவு கூர்ந்தார். ஆகவே காற்றை வீசப்பண்ணினார். அப்போது ஜலம் வற்றினது (ஆதி.8:1).

காற்றுக்கு ஒப்பாக பரிசுத்த ஆவியானவரைத் தேவன் அனுப்பினபடியால்தான், ஜலம் வற்ற ஆரம்பித்தது. நோவாவின் பேழையும் தரையில் அமர்ந்தது. பேழைக்குள் அடைபட்டிருந்த அனைவரும் சிறகடித்து வெளியே வந்து, சுதந்தரமாக வாழ ஆரம்பித்தனர்.

ஆம், இன்றும் அநேக கிறிஸ்தவர்களும் விசுவாசிகளும் ஆவிக்குரிய வாழ்விலும், சரீர வாழ்விலும் கூண்டுக்குள் வாழும் பறவைகளைப்போலக் காணப்படுகின்றனர். உலகில் அனைத்து வசதிகளுடன் வாழ்ந்தும், உள்ளத்தில் மகிழ்ச்சியின்றியும் யாதொரு சுதந்தரமுமின்றியும் சிறைப்பட்ட கைதிகள் போலக் காணப்படுகின்றனர்.

மனிதன் பூமியில் எல்லா அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலைபெற்று ஆவிக்குள் சுதந்தரமாய் வாழவே இயேசு கிறிஸ்து இவ்வுலகில் அவதரித்தார். மனிதனுடைய ஆத்துமாவிற்கு எத்தனைவிதங்களில் சுதந்தரம் தேவையோ அத்தனைவிதமான சுதந்தரங்களையும் தேவன் தமது பரிசுத்த ஆவியானவரான காற்றை வீசச்செய்து, தர வல்லவராயிருக்கிறார்.

அன்பானவர்களே! "பரிசுத்த ஆவியானவராகிய காற்றை என்மீது வீசி, என்னை எல்லாப் பாவ அடிமைத்தனத்திலிருந்தும் விடுவித்து, சுதந்தரமான கிறிஸ்தவனாக வாழும்படிச்செய்யும் ஆண்டவரே!" என்று நீங்கள் இயேசுவிடம் கேளுங்கள். பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்பான காற்றைப் பெற்று வாழுங்கள்.

பரிசுத்த ஆவியானவரான காற்று வாழ்வதற்குரிய உணவையும் அளிப்பவர். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலர் வனாந்தர வழியாய்க் கானான் தேசத்தை நோக்கிச் செல்லும்போது, தங்களைச் சுற்றித் தரையில் பெய்திருந்த பனிபோன்ற மன்னாவைத் தின்று, வெறுப்புடன் வாழ்ந்தனர். இறைச்சியின் தேட்டத்தால், தங்களை வழி நடத்திவந்த மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தனர்.

அப்பொழுது கர்த்தர் காற்றை வீசச் செய்து சமுத்திரத்திலிருந்து காடைகளைக் கொண்டுவந்து, அவர்களது பாளயத்தைச் சுற்றிலும் இரண்டு முழ உயரத்துக்கு அவற்றை விழுந்து கிடக்கச்செய்தார் (எண்ணாகமம் 11:31). இஸ்ரவேலர் காடைகளை வாயால் தின்று தெவிட்டி, மூக்கால் வெளிவரும்வரை நன்றாகப் புசித்தார்கள். இது சரீரத்திற்கான உணவுமட்டுமே. இதனால் சரீரம்தான் வாழ முடியும். இது உலகில் வாழ மட்டுமே உதவும். ஆத்துமாவிற்கு ஆகாரம் கிட்டாது. ஆனால், பவுல் அப்போஸ்தலன் கூறுவது என்ன?

"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில்

அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலாத்தியர் 2:20).

அன்பானவர்களே! கிறிஸ்துவுக்காக வாழவேண்டும் என்பதையே, கிறிஸ்தவன் தனது இலட்சியமாகக் கொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்காக வாழ பவுல் அப்போஸ்தலனைப் போல ஆவிக்குரிய ஆகாரமும், ஆவிக்குரிய பெலனும் தேவை. அதற்குப் பரிசுத்த ஆவியானவராகிய காற்று உங்களுக்கு அவசியம். பெந்தெகொஸ்தே நாளில் கரங்களைத் தட்டி, அந்நியபாஷைகளில் பேசினால்மட்டும் போதாது. உணவு, உறைவிடம், உடுப்பு இவற்றிற்காக தேவனிடம் முறுமுறுக்கக்கூடாது.

பரிசுத்த ஆவியாகிய காற்றை இன்றைய தினத்திலே பெற்று, முறுமுறுப்பை உங்களிடமிருந்து அகற்றி, கிறிஸ்துவைத் தரித்து வாழுங்கள்.

மூன்றாவதாக, பரிசுத்த ஆவியானவர் அக்கினிமயமான நாவுகளாகக் காணப்பட்டார். அக்கினி சத்தியத்திற்கும், பாதுகாப்பிற்கும் அடையாளமாய்க் காணப்படுகின்றது.

தேவனைவிட்டுப் பின்மாறிப்போன இஸ்ரவேலருக்குக் கர்த்தர்தான் உண்மைத் தேவன் என்பதையும், விக்கிரகங்கள் தேவனோடு ஒப்பிடத்தக்கவையல்ல என்பதையும் எலியா நிரூபித்துக் காட்டவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தை, 1 இராஜாக்கள் 18 ஆம் அதிகாரத்தில் காணலாம்.

ஒரு பலிபீடத்தையுண்டாக்கி, அதின்மீது கட்டைகளை அடுக்கி, காளைகளைத் துண்டித்து, அதின்மேல் வைத்து, தேவனை நோக்கி ஜெபித்து, வானத்திலிருந்து அக்கினியைப் பலியிலிறக்கி, அவற்றைப் பட்சிக்கும்படி செய்யவேண்டும். அவ்வாறுள்ள தேவனே உண்மைத் தெய்வம் என்னும் சத்தியத்தை நிரூபித்துக் காட்டும்படி எலியா தீர்க்கதரிசி, பாகாலின் தீர்க்கதரிசிகளிடம் கட்டளை யிட்டான்.

பாகாலின் தீர்க்கதரிசிகளால் இதனை நிரூபித்துக் காட்டமுடியவில்லை. எலியாவின் வேண்டுதலைக் கேட்டு, தேவன் வானத்திலிருந்து அக்கினியை இறக்கி, பலிபீடத்திலிருந்த காளைகளைப் பட்சித்துப்போட்டார். இதிலிருந்து நாம் அறிவது என்ன? அக்கினி சத்தியத்தை நிரூபித்துக்காட்டும் என்பதாகும்.

ஆம், அன்பானவர்களே! இயேசு ஒருவரே உண்மைத் தேவன் என்பதை நாம் பெற்றுக்கொள்ளும் பரிசுத்த ஆவியின் அபிஷேகமாகிய அக்கினியால் உலகத்துக்கு நிரூபித்துக்காட்டவேண்டும். நாம் அதற்காகவே அழைக்கப்பட்டுள்ளோம். இதுவே பெந்தெ கொஸ்தே நாளில் நாம் செய்யவேண்டிய ஊழியமாகும்.

அடுத்து, பரிசுத்த ஆவியின் அக்கினி யினால் நாம் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். சீரியாவின் இராஜா இஸ்ரவேலரை எதிர்த்து யுத்தஞ்செய்ய நினைத்தபோதெல் லாம், அவனது கையினின்று அவர்கள் தப்பித்துக் கொள்ள, தீர்க்கதரிசியான எலிசா வழிகோலி னான். இதனால் அதிக ஆத்திரமடைந்த சீரிய இராஜா, எலிசா வாழ்ந்துகொண்டிருந்த தோத்தானை, தனது குதிரைப்படைகளினாலும், இராணுவத்தாலும், இரதங்களாலும் இராக்காலத்தில் வளைந்துகொண்டு, முற்றுகையிட்டான்.

எலிசாவின் வேலையாள் காலமே எழுந்து வெளியே செல்லுகையில், தங்களை வளைந்து கொண்டிருந்த இராணுவங்களைக் குறித்து எலிசா தீர்க்கதரிசியிடம் கூற, அவன் தன் வேலைக்காரனின் கண்களைத் திறக்கும்படி தேவனிடம் வேண்டினான். தேவன் வேலைக் காரனின் கண்களைத் திறந்தார். தங்களின் பாதுகாப்பிற்காகச் சூழ்ந்திருந்த அக்கினி மயமான குதிரைகளையும் இராணுவ வீரர்களையும் அவன் கண்டான். ஆம், அக்கினி எல்லா எதிரி களிடமிருந்தும் பாதுகாப்பை அளிக்கின்றது என்பதை இதிலிருந்து நாம் அறியலாம்.

அன்பானவர்களே! நீங்கள் பரிசுத்த ஆவியின் அக்கினியால் நிரப்பப்பட்டிருந்தால் பரிசுத்த ஆவியானவரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளுவீர்கள்.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதன் அடையாளங்கள்

"அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" (அப்போஸ்தலர் 2:4).

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும்போது, வெளியரங்கமான அடையாளங்கள் நபருக்கு நபர் வேறுபடலாம். சிலர், கண்ணீர் மல்க அந்நியபாஷைகளில் பேசுவர். மற்றுஞ்சிலர், முகமலர்ந்து அந்நியபாஷைகளில் பேசிக்கொண்டிருப்பர். வேறுசிலர் தரையிலே உருண்டு உருண்டு, அந்நியபாஷைகளில் பேசுவர். இவைகளனைத்தும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்போது ஏற்படும் ஆரம்ப அடையாளங்களும் வெளியரங்கமான செயல்களுமாகும்.

தேவனின் குரலைக் கேட்பது, ஒருவித நூதனமான பயபக்தியினால் நிரப்பப்படுவது போன்ற உணர்வுகளைப் பலரும் தாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டதற்கோர் அடையாளமாகக் கூறுகின்றனர். இது தவறு.

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதற்கு வேதம் கூறும் உறுதியான அடையாளம் அந்நியபாஷைகளைப் பேசுவதேயாகும். அப்போஸ்தலர் பத்தாம் அதிகாரத்தில் யூதரல்லாத புறஜாதியினர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அந்நியபாஷைகளைப் பேசினதைக் காணலாம். அப்போஸ்தலர் 19 ஆம் அதிகாரத்தில் எபேசு பட்டணத்திலிருந்தவர்கள் பரிசுத்த ஆவியை அந்நியபாஷையின் அடையாளத்தோடு பெற்றுக்கொண்டதைக் காணமுடிகிறது. இதனால் மாயவித்தைக் காரனான சீமோன் இயேசுவை ஏற்று கொண்டான். பரிசுத்த ஆவியினால் நிறைந்து அந்நியபாஷைகளில் பேசுவதும் தீர்க்கதரிசனம் உரைப்பதும் வெளியரங்கமாகக் காணக்கூடிய ஒரு அடையாளமாகும்.

விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளும்போது இருவித நன்மை களைப் பெற்றுக்கொள்வர். தாங்கள் பேசு அந்நிய பாஷைகளின் பொருள் இன்னதென்று அறியமுடியாவிடினும், தாங்கள் தேவனோடு ஆவியில் பேசிக்கொண்டிருப்பதை உணருவர். அவ்வாறு தேவனோடு பேசுவதால் பக்தி விருத்தியும் அடைவர்.

அந்நியபாஷையைப் பேசுகிறவன் பக்தி விருத்தியடைந்து பரிசுத்தத்தில் பூரணமடை வான். பரிசுத்தம் என்பது தொடர்ந்து வளருகின்ற ஓர் அனுபவம். திடீரென ஒருவன் பரிசுத்தமடையமுடியாது. தேவனோடு பரிசுத்த ஆவியினால் இணைந்து பேசுபவர்கள்தான் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடையமுடியும். மட்டுமல்லாது, இயேசுவின் சாயலைப் பெற்றுக்கொண்டு, இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வரும்போது அவரோடு மறுரூபமாகவுமுடியும்.

அன்பானவர்களே! விசுவாசத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வோம். பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்பான பெருஞ் சத்தம், காற்று, அக்கினி போன்றவைகளினால் நமது தேவைகள் சந்திக்கப்படும்; சத்துருவின் மேல் ஜெயம் கிட்டும்; அடிமைத்தனத்தி லிருந்து விடுதலைபெற்று சுதந்திரம் அடைவோம்; ஆவிக்குரிய ஆகாரத்தால் பெலப்படுவோம்; சத்தியத்தை அறிந்து கொள்ளுவோம்; சிறந்த பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளுவோம்; பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடைந்து, இயேசுவின் சாயலுடன் அவர் வருகையில் அவரோடு ஏகுவோம்.

கர்த்தர்தாமே நமக்கு வேண்டிய கிருபை களைத் தந்தருளுவாராக.

"Behold, I come quickly"

Pastor M.K. Sam Sundaram

The message is about the Second Coming of Jesus Christ which the Holy Spirit led me to give you.

As you read Revelation 22:7,12 and 20 quoted below, you will notice that the words, "*... I come quickly*" are found in all the three verses. Those three words were spoken by the Lord Jesus Himself in the last chapter of the last book in the Bible.

Rev. 22:7

"Behold, I come quickly: blessed is he that keepeth the sayings of the prophecy of this book."

Rev. 22:12

"And, behold, I come quickly; and my reward is with me, to give every man according as his work shall be."

Rev. 22:20

"He which testifieth these things saith, Surely I come quickly. Amen. Even so, come, Lord Jesus."

The fact that the announcement of Jesus is found in the last chapter of the last book in the Bible assumes great significance, and we are expected to take the words of Jesus very seriously and prepare ourselves to meet Him in midair.

The coming of Jesus was repeatedly spoken of by Jesus Himself, and we also read in the Bible that the apostles and some of the Old Testament saints also spoke about it.

In our own experience we have seen how anything that is reiterated a few times assumes importance. In Revelation chapter 22 Jesus speaks about His Second Coming three times, and we should, therefore, take His words very seriously.

The words in the three verses seem indistinguishable, but a deep study of them will reveal the difference in their contexual meaning. In order to understand the difference, we should read the verses above and below them.

All the three verses are conceptually distinct from one another in the following ways:

1. v.7 implies our expectation and responsibility.

2. v.12 mentions our endeavour and reward.

3. v.20 expresses explicitly our entreaty and rejoicing.

The words of Jesus in verse 7: "*... I come quickly*" seem to imply that His coming is imminent. But, if you turn to II Peter 3:8 you will understand that with the Lord a thousand years are just a day and a day is a thousand years. The early apostles believed

that Jesus would come during their own life time. Even Apostle Paul believed so, and therefore wrote, "... *the dead in Christ shall rise first: Then we which are alive and remain shall be caught up together with them in the clouds, to meet the Lord in the air: and so shall we ever be with the Lord"* (I Thess.4:16,17).

The words quoted clearly indicate that Paul believed Jesus would return during his own life time. But, the word *'quickly'* in v.7 of Rev.22nd. chapter should be understood in the light of the previous verse (v.6) in which we read, "... *These sayings are faithfull and true: and the Lord God of the holy prophets sent his angel to shew unto his servants* ***the things which must shortly be done."*** It is therefore clear that there are certain things which need to be done and only after they are done will the Lord come. As we read in verse 7, "... *blessed is he that keepeth the sayings of the prophecy of this book"*, we are expected to keep the statutes and precepts laid down in the book.

Our expectation and responsibility

Our expectation

There are certain privileges and blessings which we can expect as we read verses 1-5 of Rev. chapter 22.

(i) Strength

Rev.22:2 speaks of the tree of life on either side of the river which bears twelve different kinds of fruit one for each month. The leaves of the tree have the healing virtue. The strength we derive from the leaves will help us to resist the diseases which normally afflict weak bodies. Because of the existence of the tree of life in heaven, we will get strength in our body. Our life in heaven will be free from pain caused by diseases. The leaves with medicinal properties to heal are freely available in heaven.

(ii) The sinless state in heaven

"And there shall be no more curse" (v.3):

Adam the firstman and his wife Eve sinned against God, and therefore they were cursed. As a result of their sin the earth was cursed and the serpent in whose guise Satan came and tempted the innocent couple was also cursed. Since there is no sin in heaven, there is no curse either. The blissful state of heaven devoid of sin and curse should impel believers to long for the coming of Jesus Christ.

(iii) Service

"... the throne of God and of the Lamb shall be in it; and his servants shall serve him" (v.3):

In the Old Testament the children of Israel were considered servants of God, and in the New Testament we believers are called royal priests with duties to serve the Lord assigned to us. It is indeed a great privilege to serve God, and to be called "the servants of God" is an honour bestowed upon us.

(iv) Satisfaction

"And they shall see his face; and his name shall be in their foreheads" (v.4).

What we see on the planet Earth is

only a shadow of the reality in heaven. Here we feel the presence of Jesus, but we do not see His face, whereas we shall see His face at the time of His appearing in midair. Then the dead in Christ shall rise and those who are alive will be transformed. All will be *"caught up"* to be with Him in heaven for ever. In heaven we shall be satisfied with being with Him and seeing His face all the time. It will be an endless satisfaction unlike what we get here.

(v) Safety

"And there shall be no night there; and they need no candle, neither light of the sun; for the Lord God giveth them light: and they shall reign for ever and ever" (Rev.22:5).

In heaven there is no night and therefore there is no need for any light there. God Himself will give us light. In our life on the earth there is the sun to give us light during the day, and the moon and the stars shed their light in the night. Yet, there is no safety for us especially in the night because of some dangerous, nocturnal creatures which prowl around and also robbers who pose a threat to our life and property. Heaven is a very safe place because it is always day with no night following it. The Lamb of God Himself will be the light for us and we shall reign with Him for ever and ever.

Our responsibility

"Behold, I come quickly: blessed is he that keepeth the sayings of the prophecy of this book" (v.7).

In Rev. Chapter 22 we read the word *'prophecy'* four times (vv.7,10,18 & 19). Jesus points out not only the privileges we shall enjoy in heaven, He also expects us to be responsible enough to keep the sayings of this book of prophecy or revelation.

Right from the beginning till the end Jesus stresses the importance of an overcoming (victorious) life. When we read the words of Jesus spoken to the seven Curches in Asia, it is clear that Jesus is concerned about each one of them leading a victorious life. He who overcomes shall eat of the tree of life, the second death shall not hurt him, he shall be given the hidden manna and power over the nations, he will be made the pillar of the Church, and lastly, he shall sit with Jesus when He rules the earth. Living an overcoming life is mentioned in Rev.15:2 and 21:7.

Keeping the prophecy of the book only means following the precepts laid down in it and leading a victorious Christian life. Jesus has promised a place at His right hand to those who are overcomers. They will be seated with Him on His throne (Rev.3:21).

If you want to be an overcomer, you should overcome the temptation of the flesh, Satan and the world just as Jesus did. Jesus the second Adam did not succumb to the temptation of the devil as the first Adam did and fell into sin.

Jesus used two important methods to be victorious over Satan. One, he remembered the Word of God and used the apt one at the right moment. The second one is that

He resisted the devil and made him flee from Him. Your physical strength, determination, labour, gifts or talents will be of no avail when the devil comes to tempt you in a very subtle manner. Only the proper use of the Word of God and your resistance to His wile tactics will make you an overcomer.

Commit the Word of God to memory and draw on the verses from Holy Scripture when the tempter comes to entice you. When you shoot the verses at the devil, he cannot but flee from you.

Our endeavour and reward

"And, behold, I come quickly; and my reward is with me, to give every man according as his work shall be" (Rev.22:12).

The phrase *'according as his work'* implies the work you have put in. One type of work is the work of condemnation and the other is that of commendation. We should examine our work and see how far it will merit the commendation of Jesus. If it is not commendable, it will be condemned. The reward Jesus has for each one of us will be according to the work each one does.

Revelation chapter 2 verses 6 and 15 mention the name 'Nicolaitans'. The Bible gives us no clue to who they are. But, if we read verses 14 and 15 together, we may understand that God abhors idol worship and fornication. Balaam led Balak to cast a stumbling block before the children of Israel *"to eat things sacrificed to idols and to commit fornication."* Idolatry and adultery are abominable in the eyes of God, and de[eds] such as murders, sorceries, fornicati[ons], thefts (Rev.9:21), besides idol worship, termed *"Works of condemnation."*

When Jesus is going to reward [or] punish us according to our deeds, we sho[uld] not only think of our good deeds, but al[so] the bad ones which do not please the Lo[rd]. Jesus expressed His displeasure at the dee[ds] of the Church in Sardis, for they were n[ot] perfect. They were hypocrites and th[ey] thought they were alive, but in fact, they we[re] dead. Speaking to the Laodicean Chur[ch], Jesus said they were neither hot nor col[d] and their being lukewarm showed their i[n]different attitude.

When Jesus comes, many apparent[ly] good believers and servants of God will b[e] forsaken because their deeds are not perfe[ct] in the eyes of the Lord. They are hypocrite[s] and the Lord reproves the complacency o[f] such people.

Jesus also commends your action[s] and achievements if they are good. Even whe[n] He was in the flesh on the earth, He commended the action of the woman wh[o] brought an alabaster box of ointment, brok[e] it and poured it on Him. When a few people made an adverse comment on her action, Jesus said, *"Let her alone; why trouble ye her? She hath wrought a good work on me"* (Mark 14:6-8).

It is significant that none of the close circle of apostles and many disciples of Jesus came forward to honour Him at the

time of His burial, but, this woman anointed Him while He was alive, thus signifying His death and burial. If you love Jesus, you will give Him your best. Similarly, you are expected to show your love to people by your good deeds as Dorcas did. When she died, all the widows who had received help from her stood weeping, and showed the coats and garments which she had made while she was alive. The commendable actions that you do for Jesus and the people who deserve to be helped reveal your love for Him.

Our entreaty and rejoicing

"He which testifieth these things saith, "Surely I come quickly. Amen. Even so, come, Lord Jesus" (Rev. 22:20).

As already mentioned, though the three verses in Rev.22:7,12 and 20 seem exactly the same, they are not. Here in this verse, the word *'surely'* is added by which Jesus stresses the fact of His return. It is certain He will come to take His bride with Him. When He comes, He will reward you with crowns and stars according to your good deeds.

The words, *"Come, Lord Jesus"* show the way the bride entreats Jesus the Bridegroom to come quickly. Jesus says, *"Surely I come quickly"*, and the word *'surely'* denotes certainty. There is no doubt that Jesus will come, and quickly, too, to take the bride with Him. When the bride is taken to heaven, there is no doubt there will be great rejoicing.

To meet Jesus in midair when He comes, you should long for His coming. It is not enough to say you love His appearing, you should be eagerly waiting for Him to come.

Apostle Paul was one who longed for Jesus' return. His words, *"... not to me only, but unto all them that love his appearing"* (II Tim.4:8) clearly reveal his longing to be with Jesus wearing the *"Crown of righteousness"*.

Are you, like Apostle Paul, waiting for Jesus' appearing or do Jesus' words, *"Behold, I come quickly"* sweep over your heart a wave of fear? Examine yourself now and set your life in order so that you are not forsaken at His coming.

"Even so, come, Lord Jesus" is the writer's plea to the Lord, and it should also be the prayer and supplication of every believer who not only loves Jesus' appearing in midair, but also lives a life acceptable to Him.

A life pleasing to the Lord means having a good conscience, a life of close communion with the Lord in prayer, and participating in the Holy Communion. Only those who do God's will and not their own, and those who constantly examine their life will be worthy of meeting Jesus in midair.

When we go to heaven with Jesus, what a joyful experience that will be! We shall rejoice with myriads of angels and innumerable saints there, as we will be in the presence of our Lord and Saviour Jesus Christ for ever and ever. Hallelujah!

ஊழியர் பகுதி

விசுவாச அப்போஸ்தலன்

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

மாபெரும் ஊழியத்துக்கு ஆயத்தம்

"இயேசுவின் நாமத்தினாலே இந்த மனிதனைத் துன்புறுத்தும் பொய்யின் ஆவியே, இவனை விட்டு வெளியேவா" எனக் கட்டளையிட்டார். உடனே அந்த மனிதன் சொஸ்தமானான். அவனது அமைதி திரும்பிற்று. இரட்சிப்பின் நிச்சயம் அவனுக்குள் மீண்டும் உதித்தது.

"இதற்காகத்தான் நான் உன்னை அபிஷேகித்தேன்" அதே குரல் மீண்டும் அவரது இதயத்தில் எதிரொலித்தது. அழைப்பின் நிச்சயம் அவருக்குத் தெரிந்துவிட்டது. அழைப்பின் நோக்கம் அவருக்குப் புரிந்துவிட்டது.

இனி என்ன? அதிநிச்சயத்தோடு, திடநம்பிக்கையோடு, உறங்கா உறுதியோடு, அந்தத் தம்பதியினர் இடையறா ஊழியத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். இங்கிலாந்து தேசமெங்கும் சுற்றித்திரிந்தனர். அவர்கள் சென்ற இடமெல்லாம், மக்கள் பாவ உணர்வால் குத்தப்பட்டனர். ஒருமுறை, ஒரு மளிகைக் கடையில் விக்கிள்ஸ்வொர்த் நுழைந்ததுதான் தாமதம், மூன்றுபேர் பாவ உணர்வால் குத்தப்பட்டு அவர்முன் முழங்காலில் வீழ்ந்தனர். மற்றொருமுறை, வயல்வெளியிலே நடந்துசென்றுகொண்டிருந்த விக்கிள்ஸ்வொர்த், அங்கு வேலை செய்துகொண்டிருந்த இரண்டு பெண்களைப் பார்த்து, "நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டார். இந்தக் குரல் அவர்கள் காதில் விழுந்தவுடனே, அவர்கள் கைகளில் இருந்த பக்கெட்டுகள் கீழே விழுந்தன. தேவனை நோக்கி மன்னிப்புக்காகக் கதற ஆரம்பித்தனர். இதோ, விக்கிள்ஸ்வொர்த்தின் ஊழியப் பயணம் ஆரம்பமாகிவிட்டது.

முழு நேர ஊழியம்

இப்போது நாளெல்லாம் ஜெபமு உபவாசமும்தான். இங்கிலாந்து தேச முழுவதிலுமிருந்து கடிதங்கள் வர ஆரம்பித்த அவர் நேரில் வந்து சுகவீனரைச் சுகமாக்கு படியான அழைப்புக் கடிதங்கள் அத்தனையு அவர்களது வேண்டுதல்களையும் அவ ஏற்றுக்கொண்டார். சில இடங்கள் மிக தொலைவிலுள்ள சிறு கிராமங்களாக இருக்கு அப்பேர்ப்பட்ட சமய சந்தர்ப்பங்களில், இரயில் பயணம் செய்து ஸ்டேஷனை விட்டிறங்கி சுமார் பதினைந்து கிலோமீட்டர் தூர சைக்கிளில் சென்றுகூட, தம் குணமாக்கு பணியைச் செய்திருக்கிறார் விக்கிள்ஸ்வொர்த்.

இவ்வாறு ஊழியம் பெருகப் பெருக அவரது தொழில் நலிவடையத் தொடங்கியது ஊழியத்தின் நிமித்தமாக, அவர் வெளியூ செல்லும்போதெல்லாம், அவரது வாடிக்கையாளர்கள் வேறு பிளம்பர்களை (குழாய் செப்பனிடுபவர்களை) நாடவேண்டிவந்தது எனவே நாளடைவில் அவரது தொழில் நலிய ஆரம்பித்தது. முடிவில் அவருடைய வாடிக்கையாளர்கள் எல்லாருமே வேறு பிளம்பர்களைத் தங்களுடைய சேவைக்கு நியமித்துக் கொண்டார்கள். இதற்கெல்லாம் தீர்வு காணும் ஒரு நாளும் வந்தது.

ஒரு விதவைக்கு அவள் வீட்டில் குழாய் செப்பனிடும் தேவை இருப்பதாக அறிந்தா விக்கிள்ஸ்வொர்த். ஒருவரும் அழையாமல் தாமாகவே அந்த வீட்டுக்குச் சென்ற விக்கிள்ஸ்வொர்த், குழாய் செப்பனிடும் வேலையை மாத்திரம் செய்யாமல், அந்த வீட்டின் கூரையையும் பழுதுபார்த்துக் கொடுத்தார். அதற்குக் கூலி எவ்வளவு என்ற

அந்த விதவை கேட்டபொழுது, தாமாகவே அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வந்தன, "எனக்கு எதுவும் தேவையில்லை, என்னுடைய கடைசி செப்பனிடும் வேலையாக, இதை நான் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொடுத்து விடுகிறேன்."

தனது வாழ்க்கையில் எடுத்தே தீர வேண்டிய முடிவை எடுத்தாயிற்று. அடுத்த நடவடிக்கையாக, தனது தொழில் சம்பந்தமான வரவு செலவுகளைச் சரியாகச் செலுத்தித் தீர்த்தார். இனி வாழ்க்கை என்பது விசுவாச ஜீவியம்தான். முழுநேர ஊழியம் அல்லது விசுவாச ஜீவியம் என்பது அகோரமான வறுமைதான் என்று அவர் கேள்விப்பட்டிருக்கிறார். எனினும், தேவனுக்கு உண்மையும் உத்தமுமாய் ஊழியஞ்செய்தால், தேவனே அபரிமிதமாய்ப் பராமரிப்பார் என்று நம்பினார். தேவனோடு ஒரு கூட்டுறவு வைத்துக்கொண்ட இவர் தேவனிடம் ஓர் கோரிக்கையை வைத்தார்.

"நைந்த செருப்புகளையோ, கிழிந்து தொங்கும் கந்தலாடைகளையோ நான் போட்டுக்கொள்ளும் நிலை ஒருநாளும் எனக்கு வரலாகாது. இதில், ஏதாவதொன்று எனக்கு வந்துவிட்டாலும் நான் என் பழைய தொழிலுக்குப் போய்விடுவேன்."

அவரது தேவைகளைச் சந்திக்க, தேவன் ஒருபோதும் தவறியதேயில்லை. அவரும் தம் பழைய தொழிலுக்குத் திரும்பவேயில்லை.

துணைவியை இழந்த துயரம்

இவ்வாறு மகிமையாய்த் தொடங்கியது அவரது ஊழியப்பயணம். ஆயினும், தம் வாழ்வின் மிகப் பெரியதோர் இழப்பை அவர் விரைவில் சந்திக்க வேண்டிவந்தது.

அவர் ஸ்காட்லாந்துதேச ஊழியத்துக்காகப் புறப்பட்டிருந்த நேரம். இரயில்வே ஸ்டேஷனில் காத்துக்கொண்டிருந்தார். அப்போது இடி விழுந்ததுபோல் ஓர் செய்தி அவருக்கு வந்தது. அவர்களது சொந்த ஊழியமான 'பௌலாந்து தெரு ஊழியம்' முடிந்து வீடு திரும்புகையில் பாலி ஹார்ட் அட்டாக் என்ற இதய பாதிப்பால் மயங்கி விழுந்துவிட்டார் என்ற செய்தி அது.

வீடு சென்றார் அவர். அதற்குள் பாலியின் ஆவி பிரிந்துவிட்டது. இதை விக்கிள்ஸ்வொர்த்தால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. உரத்தக்குரலில் அவர் மரணத்தைக் கடிந்துகொண்டார். பாலியைத் திருப்பித் தரும்படி கட்டளையிட்டார். அவள் உயிர் அவளுக்குள் திரும்பவந்தது. அப்போது தேவன் பேசினார், "அவள் என்னோடு இருக்கும்படி அவளை நான் அழைத்துக்கொள்ளவேண்டிய நேரம் இதுதான்." நொறுங்குண்ட இதயத்தோடு, விக்கிள்ஸ்வொர்த் தேவனுடைய குரலுக்குச் செவிசாய்க்க வேண்டியதாயிற்று. தாம் இத்தனை ஆண்டுகளாக நேசித்த அந்த ஆருயிர்த் துணைவியை தேவனிடமே ஒப்புவிக்கவேண்டியதாயிற்று. திருமதி பாலி விக்கிள்ஸ்வொர்த் தன் ஜீவன் பிரியும் நேரம்வரை தன் தேவனுக்கு உண்மையும், உத்தமுமாய்ச் சேவைசெய்தாள். அந்த நாள் 1913 ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் முதலாம் நாள்.

தன் ஆவியே முறிந்தது போலாயிற்று விக்கிள்ஸ்வொர்த்திற்கு. அடக்க ஆராதனை முடிந்தபின்பு, மீண்டுமாய்க் கல்லறைக்குச் சென்று, அந்தக் கல்லறைமீது படுத்துக் கொண்டார். தானும் அப்போதே அங்கேயே செத்துப்போய்விட வேண்டுமென்று ஆசைப் பட்டார். அப்போது தேவன் அவரிடம் பேசினார், "எழுந்து போ, உனக்கு இன்னும் வேலை இருக்கிறது." விக்கிள்ஸ்வொர்த் பதிலளித்தார், "ஆண்டவரே, தேவரீர் எனக்கு ஆவியானவரின் இரட்டிப்பான வரங்களை— அதாவது மறைந்த என் மனைவியின் வரங்களையும், என் வரங்களையும் சேர்த்து அளிப்பீரென்றால் எழுந்துபோய் உம்முடைய வேலையைச் செய்கிறேன்" என்றார். தேவன் அவர்மீது கிருபை பாராட்டினார். அவர்

வேண்டுதலை அருளினார். அன்று முதல் அவருடைய ஊழியம் இரண்டு மடங்கு சுடர்விட்டுப் பிரகாசித்தது.

ஆயினும், இந்தப் பிரிவு குறித்து, அவர் நெடுங்காலத்துக்குப் பின்னும் கண்ணீர் விட்டுக் கலங்கி, கதறியது உண்டு. அவருக்கு மனைவியாக மட்டுமின்றி ஆசானாகவும் இருந்து கல்வி போதித்தவரல்லவா, "அந்த ஏற்ற துணை"?

இந்த விசுவாசப்பறவை, இந்த இழப்பிற்குப் பின்பும், மேலும் 34 ஆண்டுகள் வாழ்ந்து, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றிற்று. ஆயினும் இந்த ஆறாத் துயரம், வாழ்நாள் முழுவதும் அவருக்கிருந்தது. இந்தத் தனிமை அவரை மேலும் மேலும் தேவனிடத்திலும் அவரது வார்த்தைகளிடத்திலும் அடைக்கலம் புகும்படி நெருக்கியது. அவருக்குத் தஞ்சம் வேறேதும் இல்லை. "பள்ளிப் படிப்பறியாப் பாலகனாகிய" இவர் வாழ்க்கையில் வேறெந்தப் புத்தகத்தையும் படித்ததில்லை. செய்தித்தாளும் வாசித்ததில்லை. அவர் படித்த ஒரே புத்தகம் வேதம் மட்டும்தான். தமது கோட்பாக்கெட்டில் வேதம் இல்லையென்றால் தாம் இன்னும் முழுமையாக ஆடை அணியவில்லை என்றே கருதிக்கொள்வார் அவர். அந்த மகிமையான புத்தகத்தை விட்டுப்பிரிந்ததேயில்லை அவர். தேவ வசனங்களை உட்கொண்டே அவர் தேவனை அவ்வளவு நெருக்கமாக அறிந்தார். இந்த அளவுக்கு தேவனை அறிந்த பக்தர்கள் மிகச் சிலரே.

(தொடரும்)

முன்னறிவிப்பின்படி நேரிட்ட மரணம்

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமானது எதிர்பார்க்கப்படாத நிலைமையில் திடீரென்று நேரிட்ட ஒரு நிகழ்ச்சியன்று. அது தேவனுடைய முன்னறிவிப்பின்படியே நேரிட்ட ஒன்றாகும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அதைக்குறித்து அறிந்திருந்தார். "*அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்*" (மத்தேயு 16:21) என்று திருமறை உரைக்கின்றது. அவர் ஏற்கனவே அறிந்திருந்தபடியால் தம்முடைய சீடர்களுக்குத் தம்முடைய சிலுவை மரணத்தைக்குறித்து முன்னுரைத்தார்.

மேலும், "*உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி...*" (வெளிப்படுத்தல் 13:8) என்று அவரை வேதாகமம் குறிப்பிடுகின்றது. அது தேவனுடைய பின்யோசனையன்று. உலகத்தோற்றமுதலாகவே தேவன் தம்முடைய குமாரனைச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பது என்று அவரால் நிர்ணயிக்கப்பட்டதொரு நிகழ்ச்சியாகும். "*அவர் (இயேசு கிறிஸ்து) உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்*" (1 பேதுரு 1:20) என்றும் வேதாகமம் குறிப்பிடுகின்றது.

பழைய ஏற்பாட்டின் காலத்திலுள்ள பரிசுத்தவான்கள் இயேசு கிறிஸ்துவின் மரணத்தைக்குறித்து முன்னுரைத்துள்ளார்கள். ஆதியாகமம் 3:15, ஆதியாகமம் 22:13, ஏசாயா

50:6, ஏசாயா 53:3-12, தானியேல் 9:24-26, சகரியா 6:12,13, சகரியா 13:7, மல்கியா 3:1-3 ஆகிய வேதவாக்கியங்களைப்பார்க்க.

"அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற (பிறவிச் சப்பாணியாகிய) இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்க ளெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" (அப். 3:16) என்று அப்போஸ்தலனாகிய பேதுரு உரைக்கின்றார்.

மறுரூபமலையினின்று இறங்குகிற போது, இயேசுவானவர் தாமும் தம்முடைய சீடர்களுக்கு, *"... மனுஷகுமாரன் மரித்தோரி லிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்"* என்று மத்தேயு 17:9 வசனம் குறிப்பிடுகின்றது.

மேலும் எம்மாவு என்னும் ஊருக்குப் போன தம்முடைய இரண்டு சீடர்களுக்கு இயேசுவானவர் உயிர்தெழுந்த பின்னர் தம்முடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையுங் குறித்து விளக்கமாய் உரைத்த விளக்க வுரையையும் நாம் லூக்கா 24:25-29 வசனங்களில் காணலாம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவைமரணமும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த அவருடைய மகிமையின் உயிர்த்தெழுதலும் தேவனுடைய எல்லா வெளிப்பாடுகளுக்குள்ளும் ஓர் ஒப்பற்ற வெளிப்படாயிருக்கின்றது. நாம் இயேசுவின் சிலுவைமரணத்தையும் அவருடைய மகிமையான உயிர்த்தெழுதலையுங்குறித்து அறிந்துணர்ந்து கொள்ள முடியாவிட்டால், அந்நிலைமையில் நம்முடைய அறியாமையானது நம்மைப் பல்வேறு பிழைகளுக்குள்ளும் குழப்பத்திற் குள்ளும் நடத்தும். அது, கிறிஸ்துவானவரின் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்த மகிமையைக் குறித்துப் பேசுகின்ற தேவனுடைய வார்த்தை நம்முடைய இருதயத்திலும் வாழ்க்கையிலும் ஆற்றுகின்ற நல்விளைவுகளுக் கேதுவான, அதன் வல்லமையையும் ஆதிக்கத் தையும் பாதிக்கின்றது.

மாற்றீடு செய்யும் மரணம்

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் (இயேசு) தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்;..." (1 பேதுரு 2:24).

இது நமக்காக இயேசு கிறிஸ்து மாற்றீடு செய்கின்ற சிலுவை மரணத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றது. இவ்வாறு இயேசு கிறிஸ்துவின் மாற்றீடு செய்யும் சிலுவை மரணத்தைக் குறிப்பிடும் வேதவாக்கியங்களை நோக்குவோம்.

"... அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்;..." (1 பேதுரு 3:18).

ஏசாயா 53:6, *"அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, ... நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்"* (தீத்து 2:14).

(ஏசாயா 53:4-12) *"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்;..."* (வசனம் 4).

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களி னிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (வசனம் 5).

"... என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்" (வசனம் 8).

"... அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப்

பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார்'' (வசனம் 12).

''*நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்*'' (2 கொரிந்தியர் 5:21).

''... *என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.*'' (கலாத்தியர் 2:20).

பாவிகளுடைய இடத்தில் இயேசு கிறிஸ்து அவர்களுடைய பாவங்களுக்காகக் கல்வாரிச் சிலுவையில் மரித்தார். பழைய ஏற்பாட்டின் காலத்திலுள்ள பலிகள் நிறைவேற்றக்கூடாத பாவப் பரிகாரத்தைக் கிறிஸ்து இயேசு கல்வாரிச் சிலுவையில் நிறைவேற்றினார். ''...*பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்*'' (எபிரெயர் 10:14) என்று திருமறை கூறுகின்றது. இவ்வாறு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்த திருப்பலியானது, அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகின்ற விசுவாசிகளின் பாவங்களைப் பிதாவாகிய தேவன் நினைவுகூருகின்ற இறுதி நினைவுகூருதலாயிருக்கின்றது. நான் உங்களுடைய பாவங்களையும் உங்களுடைய அக்கிரமங்களையும் இனி நினைப்பதில்லை என்று சொல்லுகின்றார் பிதாவாகிய தேவன் (எரேமியா 31:34).

பிதாவாகிய தேவன் தம்முடைய நித்திய நேசமுள்ள குமாரனாகிய கிறிஸ்து இயேசுவின் பரிசுத்தமும் மாசற்றதுமான இரத்தமேயல்லாமல், வேறொன்றையும் விலைக்கிரயமாய் ஏற்றுக்கொள்ளமாட்டார், ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வாயிலாக உன்னை இரட்சித்து தம்மிடமாய்ச் சேர்த்துக்கொள்ளப் பெரிது ஆவலாயிருக்கின்றார். அவ்வாறே நீயும் தேவ கோபாக்கினையினின்று தேவகுமாரனின் சிலுவை மரணத்தின் வாயிலாக விடுவிக்கப்பட்டு, தேவனிடத்தில் சேர்ந்துகொள்ள ஆவலாயிருக்கின்றாயா?

அவ்வாறு நீ தேவனிடத்தில் சேருவாயாயின் உனக்கு இம்மை—மறுமைப் பயனாகிய மகிழ்ச்சி, சமாதானம், இரட்சிப்பு உண்டாகும். இது உறுதி!

வெற்றிப்புகழ் வாய்ந்த மரணம்

''*ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் (இயேசுவும்) அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்*'' (எபிரெயர் 2:14,15).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் மரணத்தையும் அதன் அதிகாரியாகிய பிசாசானவனையும் தம்முடைய மரணத்தினால் வென்று வெற்றிவாகை சூடினார். இப்பொழுதோ அவர் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோலை உடையவராயிருக்கிறார் (வெளிப்படுத்தல் 1:18). ஆகையால், இன்று நமக்கு மரணபயம் இல்லை. பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்துகொண்டு, ''*மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்*'' (1 கொரிந்தியர் 15:55,57) என்று நாம் வெற்றி முழக்கம் செய்யலாமல்லவா? அல்லேலூயா! ஆமென். (தொடரும்)

பெண்கள் பகுதி

கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்தர்

வெகு சில நாட்களுக்குள் அப்பெண்க ...ம் அழகான மாற்றம் வருவதைக் கண்டேன்.

அசுத்தத்தின், அழுக்கின் மூடுதிரை ...ந்து, தூய்மையின் ஒளி வீச ஆரம்பித்தது.

நன்றி கலந்த அன்புடன் அப்பெண்கள் ...கள் தின்பண்டங்களையும், புலாலையும், ...ழிக் கறியையும் எனக்கும் பரிமாறினர். ...னைப் போர்த்திக்கொண்டு தூங்க சுத்தமானப் ...ர்வையொன்றையும் கொடுத்தனர்.

எல்லாவற்றிலும் மிகச் சிறந்த விளைவு ...னவெனில் அவர்களில் ஏழுபேர் தங்கள் ...ங்களையெல்லாம் தேவனிடம் அறிக்கை ...டனர். அது மட்டுமல்ல. அதுவரை அதிகாரி ...டம் மறைத்து வைத்திருந்த குற்றங்களை ...துக்கொண்டு அறிக்கையிட்டனர். வடமேற்கு ...லை மாகாணத்திலிருந்து வந்த கொலை ...யும், இரண்டு ஜேப்படித் திருடிகளும் ...ர்களில் இருந்தனர்.

"நாங்கள் ஒருபோதும் இனி இக்குற்றங் ...ளைச் செய்யமாட்டோம்" என்று அவர்கள் ...க்கு வாக்குக்கொடுத்தனர்.

"இந்த ஊழியத்தைச் செய்வதற்காகவே ...றைச்சாலைக்குள் நீ வந்திருக்கிறாய்" என்று ...ன் என் மனதுக்குள் சொல்லிக்கொண்டேன்.

ஒரு மாதம் இவ்விதம் மெதுவாக ...ந்து சென்றது.

மூன்று கைதிகள் விசாரணைக்காக ...ளியே அழைத்துச் செல்லப்பட்டபோது ...னைவிட்டுச் செல்லவேண்டியுள்ளதே ...று ஏங்கி, கண்கலங்கினர்.

ஒருநாள் வந்தது. நானும் வெளியே ...ழைக்கப்பட்டேன். சிறைக்கதவு திறந்தது. ...ன் ஆய்வாளர் அறைக்குக் கொண்டு ...ல்லப்பட்டேன்.

திகிலடைந்த முகத்தோடு அனீஸ் அங்கு உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளோடு நான் நம்பியிருந்த அச்சீமாட்டியும் அங்கு இருந்தார்கள்; ஆனால், அச்சீமாட்டி என்னைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

என்னைப் பார்த்தவுடன் அனீஸ் என் அழுக்கையும் பொருட்படுத்தாது அப்படியே என்மேல் பாய்ந்து என்னைக் கட்டித் தழுவிக் கொண்டாள். அதன்பின் வயோதிப சீமாட்டியிடமாகத் திரும்பி விசாரணையை ஆரம்பித்தாள்.

"என் தங்கை சிறையிலடைக்கப்படும் படியாக என்னசெய்துவிட்டாள்? அவள் யாரையாவது கொலைசெய்துவிட்டாளா?" என்று அனீஸ் அச்சீமாட்டியிடம் கேட்டாள்.

"உன் தங்கை கிறிஸ்தவளாகி, இஸ்லாமைப் புறக்கணித்துவிட்டாளே!" என்று அவர்கள் சொன்ன தோரணையைப் பார்க்கும் போது கொலையைவிடப் பெரும் பாதகத்தை நான் இழைத்துவிட்டதுபோல இருந்தது.

"அது அவளது சொந்த, தனிப்பட்ட நம்பிக்கை. அவள் சத்தியத்தை அறிந்து கொண்டாள். ஆகவே, அதைக்குறித்துச் சாட்சி கொடுக்க அஞ்சவேயில்லை. பாகிஸ்தானில், 'இப்படிசெய்வது சட்டப்படி குற்றம்' என்ற நிலைமை வந்தால் தவிர, அவளை அக்காரணத்துக்காகச் சிறையிலடைப்பது நியாயமற்றகாரியம்" என்று அனீஸ் திடமாய் வாதாடினாள்.

அச்சீமாட்டி அதற்கு எந்தப் பதிலையும் கொடுக்கவிரும்பவில்லை. ஒரு கணம் தாமதித்து, "அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்ல விரும்பினால் நீ கூட்டிச்செல்லலாம்" என்று பெருமையோடுகூறினார்கள்.

அனீஸ் என்னிடமாகத் திரும்பி, "குல்ஷான், இப்பொழுதே நீ என்னுடன்

வீட்டுக்கு வந்துவிடவேண்டும்'' என்றாள்.

அந்த அழைப்பில் எனக்கு அக்கறையில்லை.

''நான் ஏன் உன் வீட்டுக்கு வரவேண்டும்? உன் வீட்டைக்காட்டிலும் சிறைச்சாலையே மேலானது'' என்றேன்.

அனீஸ் புண்பட்டவள்போலக் காணப்பட்டாள். ''நீ ஏன் அப்படிக் கூறுகிறாய்?'' என்றாள்.

''உனது கணவன் என் இயேசுவையும் அவரது சிலுவையையும் பழித்துரைக்கிறாரே, அதை என்னால் கேட்டுச் சகிக்கமுடியாது. இச்சிறையிலுள்ள பெண்கள் நான் கூறுகிற காரியங்களை ஏற்றுக்கொண்டு, இயேசுவே தெய்வம் என்று அறிகையிட்டு வருகின்றனர். அவர்கள் மத்தியில் பயனுள்ள ஊழியத்தைச் செய்ய வாய்ப்பிருக்கிறது'' என்றேன்.

என் அக்காள் என்னை அன்புக் கண்ணீரோடு தழுவிக்கொண்டு ''நீ இயேசுவை எவ்வளவு நேசிக்கிறாய்!'' என்றாள்.

''நான் என் உயிரையும் இயேசுவுக்காகக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றேன்.

மெய்தான், என் வாழ்வில் நடைபெற்ற அனைத்துக் காரியங்களுமே என்னை என் விசுவாசத்தில் கட்டும்படியாகவே அமைந்திருந்தன. மனச்சோர்வின் இருண்ட சுரங்கப் பாதைகள் வழியாகச் சென்றிருக்கிறேன். ஆனாலும், இருளிலும் வெளிச்சம் உதித்தது.

அனீஸ் என்னைப் பார்த்து, ''நானும் இயேசுவை நேசிக்கிறேன், அவரைப்பற்றி இன்னும் அதிகமாக உன்னிடமிருந்து அறிந்து கொள்ளவே ஆசிக்கிறேன்'' என்றாள்.

தன் கணவருக்குச் சம்பவித்த ஒரு காரியத்தையும் கூறினாள்.

நான் அவளது வீட்டைவிட்டுச் சென்ற அந்நாளிலேயே அவர் ஒரு விபத்தில் சிக்கினார். அதனால் மருத்துவமனையில் ஒரு மாதக்காலம் போல் இருக்கநேரிட்டது. அனீஸ் தன் கணவரைப் பராமரிக்கும் முக்கியப்பணியில் ஈடுபட்டிருந்ததால் என்னுடன் தொடர்புகொள்ள முடியாமற்போயிற்று என்றும் கூறினாள்.

அனீஸ் மேலும் கூறினாள், ''உனக்கு எதிராக என் கணவர் இனிமேல் ஒன்றும் செய்யமாட்டார். நான் உன்னை வீட்டுக்கு அழைத்துவரும்படி அனுமதி கொடுத்து விட்டார்'' என்றாள்.

அந்தோ, எவ்வளவு சீக்கிரமாக நற்பேறு மாறுகின்றது. ஒருகணம் சமுதாயத்தின் மிக இழிவான பெண்களுடன் சிறைச்சாலையிலிருந்தேன். அவர்களுடன் கொண்ட உறவில் பெரிய இன்பத்தைக் கண்டேன். ஆனால் மறுகணம் இராவல்பிண்டியிலுள்ள செல்வந்தர் வாழ் பகுதியில், என் அக்காளின் அழகிய வீட்டிலுள்ள நீர்த்தொட்டியின் அருகில், பணிப்பெண்கள் எனக்கு உதவி செய்யும்படி என் கட்டளைக்காகக் கண்ணும் கருத்துமாகக் காத்திருந்தனர்.

ஆனால் என் நம்பிக்கையைப் பிறருக்குச் சொல்லாதபடி என் நாவைக் கட்டிவைக்க என்னால் முடியாததால், நான் எவ்வளவு சீக்கிரத்தில் இந்தச் சொகுசான இன்ப வாய்ப்பிலிருந்து வெளியேறவேண்டுமென்ற கட்டளை வருமோ! (தொடரும்)

அறிவிப்பு

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை வேதாகமப் பயிற்சிப்பள்ளி

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை வேதாகமப் பயிற்சிப் பள்ளியின் ஏழாவது அணி 2012-2013 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்படிவம் ஒன்றின் விலை ரூ.10/-. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய கடைசி நாள் 30-05-2012 மேலும் விவரங்களுக்கு:

முதல்வர்,
அப்போஸ்தல கிறிஸ்தவ சபை
வேதாகமப் பயிற்சிப் பள்ளி,
111, பிரிக்கிலின் சாலை, புரசைவாக்கம்,
சென்னை-600 007.
9444141944, 9884262080, 9382165712

YOUTH Section

Stephen

the stalwart

Stephen was one of the seven chosen to assist the apostles in the administrative affairs of the early Jerusalem Church. Among the seven he was noted for his outstanding character. His career was short, but illustrious. He was a worker of miracles. God's approval of Stephen's work was evident by the angelic countenance given to him. Nevertheless, the Jews led by a young radical, named Saul (later Paul) rejected his message and martyred him.

The following points lend credence to the fact that Stephen was a stalwart.

1. Character

As the widows were neglected in the daily ministrations, it was decided to select seven men of honest report who would be appointed to the business of serving tables. Stephen was one of the chosen ones. Acts 6:5 states that he was *"... a man full of faith and of the Holy Ghost and wisdom."* This honest report earned him an enviable position. He was a man in whom faith was overflowing and he was soaked in the Holy Spirit. It was obvious that no vestige of carnality was found in him. He possessed an appreciable measure of wisdom. Needless to say that Stephen's outstanding character placed him above his peers. His excellent character gave an impetus and status to his position.

2. Countenance

Acts 6:15 mentions, *"All that sat in the council looking steadfastly on him, saw his face as it had been the face of an angel."* The people and the elders were stirred up against him. The scribes caught him and arrested him. The wicked men accused him of speaking blasphemous words against him. This bitter sarcasm never alarmed him. On the contrary, Stephen's face shone because he was oblivious to the false accusation. As Stephen was the beacon of light, the glow on his face was visible to the malefactors. Stephen's intrinsic worth was indicative of the fact that he was a man having a different spirit. Certainly, this noble behaviour had an impact on the people in the council. His godly response spoke volumes for his tolerance and endurance. Indeed, he was an impeccable monument of patience.

3. Capability

Stephen's capability to preach was amazing. He had stored up voluminous details of the patriarchs. Surely he had esteemed the words of his mouth more than the necessary food according to Job 23:12. Like the people of Berea, Stephen had received the Word with all readiness of mind and searched the Scriptures daily. With the holy audacity, Stephen addressed the enemies of the cross saying, *"ye stiffnecked*

and uncircumcised in heart and ears, ye do always resist the Holy Ghost: as your fathers did, so do ye. Which of the prophets have not your fathers persecuted? and they have slain them which shewed before of the coming of the Just One; of whom ye have been now the betrayers and murderers:" (Acts 7:51,52). His preaching should have brought conviction. But the marauders did not repent. They became furious and they gnarled at him with their teeth. They cried out with a loud voice, cast him out of the city and stoned him.

4. Career

Stephen's career was brief. But it was illustrious. Acts 6:8 cites as *"And Stephen, full of faith and power, did great wonders and miracles among the people."* He had faith that could move mountains. He had faith in the unseen realities. He had faith in the coming of Jesus and the everlasting kingdom. He was endued with the invincible power to do wonders and miracles and in healing various diseases. Acts 6:10 says, *"And they were not able to resist the wisdom and spirit by which he spake."* God gave Stephen a mouth and wisdom which all his adversaries were not able to refute nor resist. It is true that Stephen's career was paved with bristles and briars. He was humiliated and he suffered indignities at the hand of the persecutors. Yet his sterling qualities took precedence ov the tribulations. The adverse circumstanc could not overpower him. He emerged vi torious. Romans 8:37 says, *"Nay in all the things, we are more than conquero through Him that loved us."* This was abs lutely true in his case.

5. Consummation

The miscreants did not want to he the precepts preached by Stephen. The stoned him. His life was about to be term nated. It was then that the inward glow beg to burn brightly and *"... being full of th Holy Ghost, looked up steadfastly in heaven, and saw the glory of God, an Jesus standing on the right hand of Go And said, Behold, I see the heavens opene and the Son of man standing on the righ hand of God"* (Acts 7:55,56). Finall Stephen called upon God saying, *"... Lor Jesus, receive my spirit. And he kneele down and cried with a loud voice, Lord, la not this sin to their charge. And when h had said this, he fell asleep"* (Act 7:59,60). Stephen went to be with the Lor after seeking forgiveness for the treacher ous men.

Thank God for the legacy which Stephen has left for posterity.

Glory be to His name.

To be like Jesus—that's our goal,
Though it doesn't happen fast;
We trust the Spirit—He's our guide,
Till we're sanctified at last. —Branon



ஏற்ற வேளையில் உதவும் கர்த்தர்

"இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக் கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்" (சங்கீதம் 34:6).

கிறிஸ்துவுக்குள் அன்பான என் அருமைப் பிள்ளைகளே! இயேசுவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த விடுமுறை நாட்களில் வேதாகமப் பள்ளிக்குச் செல்வீர்கள் என்று விசுவாசிக்கிறேன். கடந்த ஆண்டு விடுமுறை வேதாகமப் பள்ளியில் கற்றுக் கொண்ட சத்தியங்களைவிட, இந்த ஆண்டு இன்னும் அதிகமாய் இயேசுவைக்குறித்து நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். உங்கள் சுபாவத்தை மாற்ற இயேசு கிறிஸ்து வல்லவர் என்பதை, கீழ்க்காணும் கதை விளக்குகிறது. வாசித்துப் பயன்பெறுங்கள்.

"எல்லாரும் பேருந்தில் ஏறிவிட்டீர்களா? ஏன் இந்தச் சத்தம்? ஏய்! யார் அங்குச் சண்டை போடுவது?" என்று, பல கேள்விகளை அடுக்கினார் விடுமுறை வேதாகமப் பள்ளியின் செயலர்.

அவருடைய குரலைக் கேட்ட பிள்ளைகள் அமைதியாயினர். ஆனாலும் அவர்களுள் இருவரின் முகத்தில் கோபத்தின் அறிகுறிகள் காணப்பட்டன. அமைதியாக அவர் அந்தப் பிள்ளைகளிடத்தில் சென்றார்.

"ஏம்பா! பத்து நாட்கள் VBS இல் படித்தவற்றையெல்லாம் மறந்துவிட்டு, இப்படிச் சண்டையிடுவதை இயேசு அப்பா விரும்புவாரா?" என்று அன்போடு கேட்டார்.

அவர்களோ பதில் ஒன்றும் சொல்ல வில்லை. ஆகவே ஜெபித்த பிறகு, பேருந்தை இயக்குமாறு ஓட்டுநரிடம் கூறினார். விடுமுறை வேதாகமப் பள்ளியில் படித்த இளநிலை முதல், முதுநிலை வரையுள்ள மாணவர்களைச் சுற்றுலா பயணத்திற்காக அழைத்துச்சென்று கொண்டிருந்தனர் அச்சபையின் வேதாகமப் பள்ளியின் செயலரும், ஆசிரியர்களும்.

வழியிலே பிள்ளைகள் ஆடிப்பாடிக் கொண்டும், தாங்கள் கற்றுக்கொண்ட வேத வசனங்களை மனப்பாடமாகச் சொல்லிக் கொண்டும் வந்தனர். ஜெராட் என்ற சிறுவனோ வசனம் ஏதும் சொல்லாமலும், பாடாமலும் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்ப்பவனைப் போல, பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்தான். அவனருகில் ஒருவரும் இல்லை. அவன் தனியே ஓர் இருக்கையில் அமர்ந்திருந்தான். மெள்ள அவனைப் பேசவைக்க முயன்றார் ஆசிரியர்களுள் ஒருவர்.

"அங்கிள்! நான் ஒரு செல்வந்தரின் மகன். எனக்கு இதிலெல்லாம் ஈடுபாடு இல்லை. என் பெற்றோர் வற்புறுத்தியதால் தான் இந்தப் பயணத்தில் கலந்துகொண்டேன். ஆகவே, என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்" என்றான், ஜெராட்.

ஜெராட்டின் பெற்றோர் தங்கள் மகன் மற்றபிள்ளைகளோடு ஒன்றுகூடி வாழக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்பினர். அவனோ யாருடனும் சேர விரும்பாதவன். குறைவு என்ற சொல்லின் பொருளை அவன் அறியாதவன். தான் எவருக்கும் அடிமை யில்லை என்றும், மற்றவர்களோடு பழகுவது தரக்குறைவு என்றும் எண்ணினான்.

பேருந்தில் பயணம் செய்த மாணவர் ஒவ்வொருவரும் ஆளுக்கோர் வசனமாகத் தங்கள் தங்கள் ஆசிரியரிடம் சொல்லி, இன்புற்றனர். ஒரு ஆசிரியை ஜெராட்டை நோக்கி, சங்கீதம் 34:6 ஆம் வசனத்தை பாராமல்

கூறும்படி கேட்டார்.

"அக்கா! எனக்கு அந்த வசனம் நன்றாகத் தெரியும். ஆனால், நான் ஏழை இல்லை. ஆகவே, நான் அதைச் சொல்ல மாட்டேன்" என்று கூறினான்.

"தம்பி! ஏழை என்றால், ஏழ்மை நிலையில் இருப்பதைக் குறிப்பது அல்ல, தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையே சுட்டிக்காட்டுகிறது. இதுவரை இதை நீ அறிந்துகொள்ளவில்லையா?" என்று கூற, மாணவர் அனைவரும் 'கொல்' என்று சிரித்தனர்.

அதற்குள்ளாக, "முட்டுக்காடு" என்ற இடத்திற்குப் பேருந்து வந்து சேர்ந்தது. பலவிதமான விளையாட்டுப் போட்டிகள், அருமையான குறுநாடகங்கள், உள்ளத்தைத் தொடும் செய்திகள் என்று எல்லாவற்றையும் மாணவர்கள் நடத்தி முடித்து, இறுதியில் படகு சவாரிசெய்ய விரைந்தனர்.

அத்துணை மாணவர்களும் தங்கள் தங்கள் ஆசிரியர்களுடன் தங்கள் முறைவரும் வரை காத்திருந்தனர். அச்சமயம் தன் தகப்பன் தனக்குக் கொடுத்திருந்த ரூ 200/- ஐ, தன் கையில் எடுத்துக்கொண்டான் ஜெராட். அருகிலிருந்த ஒரு படகோட்டியினிடம் அந்த ரூபாயைக் கொடுத்து, வேகமாகச்செல்லும் ஒரு விசைப்படகில் ஏறி அமர்ந்தான். மற்றவர்கள் கவனிக்குமுன்பாக அப்படகு பறந்தது. உற்சாகத்துடனும் பெருமிதத்துடனும் எவரும் சாதிக்க முடியாததைத் தான் செய்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்துகொண்டிருந்தான். எனினும், ஜெராட்டிற்குப் பெரும் அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

சுழன்று திரும்பிய படகு தன் கட்டுப் பாட்டை இழந்து, தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. அப்பொழுது அவனைப் பார்த்துக்கொண் டிருந்த மற்ற மாணவர்கள் அதிர்ச்சியால் உறைந்தனர். அங்குள்ள மாணவரும் ஆசிரியரும் அவனுக்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். படகிலிருந்த ஜெராட் பயத்தின் மிகுதியால் அழ ஆரம்பித்தான். அச்சமயம் நிலமையைப் புரிந்துகொண்ட படகோட்டி தான் செய்த தவறை உணர்ந்து, அதிகாரிகளிடமிருந்து தப்ப தண்ணீரில் குதித்துவிட்டான்.

இயேசு அப்பாவைத்தவிர, தன்னைக் காப்பாற்ற எவரும் இல்லை என்று ஜெராட் உறுதி கொண்டவனாய், எந்த வசனத்தைச் சொல்ல மறுத்தானோ அதே வசனத்தை அறிக்கை செய்ய ஆரம்பித்தான்.

"*இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக் கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்*" என்று உரத்த சத்தத்தோடே திரும்பத் திரும்பக் கூறினான்.

தீடிரென்று படகின் வேகம் குறைந்து சீராய் ஓடி, பிறகு நின்றது. கரையிலிருந்த படகோட்டி ஒருவன் அவனைக் கரைக்கு அழைத்துச்செல்ல அவனருகில் வந்தான். அவன் கரை சேர்ந்தபின் மாணவர் அனைவரும் ஓடி வந்து, அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டனர்.

அப்பொழுது அவன் அழுகையினூடே "அங்கிள், அக்கா! நான் நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டேன். என் பெருமையினால் மதியீனமாக நடந்துகொண்டேன். என்னை மன்னித்துவிடுங்கள். நான் ஏழை என்று என்னைத் தாழ்த்தி, சங்கீதம் 34:6 ஆம் வசனத்தைச் சொன்னபோது, இயேசு அப்பா என்னை மன்னித்து என்னை ஜீவனோடு காப்பாற்றினார். இந்த விடுமுறை வேதாகமப் பள்ளி என்னைப் புது மனிதனாக மாற்றி விட்டது" என்று சொன்னான்.

அனைவரும் மகிழ்ச்சியோடு தேவனுக்கு நன்றி செலுத்தினர்.

என் அருமைச் செல்லங்களே! பெருமை யுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக் கிறார். ஆகவே பெருமையைக் களைந்து மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் மூலமாய்ப் பெரிய காரியங் களைச்செய்வார்.

சாட்சிப்பகுதி

பதிலளிக்கும் கர்த்தர்

"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் ...ல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய ...விகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் ...ந்திருக்கிறது" (சங்கீதம் 34:15).

இருமல் என்ற வியாதியால் நான் பல ...ல்லைகளை அநுபவித்தேன். எத்தனையோ ...ந்துகளைச் சாப்பிட்ட பின்னரும் அந்த ...ய் என்னைவிட்டு நீங்கவில்லை. அதனால் ...மனம் வேதனைப்பட்டது. அப்பொழுது என் ...மகள் திருமங்கை என் வீட்டிற்கு வந்தாள். ...ள் ஒரு கிறிஸ்தவள். ஆனால் எனக்கு ...யேசுவைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவள் ...னைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

சிதம்பரத்தில் உள்ள கிறிஸ்தவ ...லயத்திற்கு நானும் என் மருமகளும் ...ன்றோம். அங்கிருந்த சகோதரிகள் எனக்காக ...ஜெபித்தார்கள். பல ஆண்டுகளாகத் தொல்லை ...டுத்த இருமல் இருந்த இடம் தெரியாமல் ...னைவிட்டுப் போய்விட்டது. இது எனக்கு ...ந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. ...யேசுவின் வல்லமையை என் சரீரத்தில் ...நுபவித்தேன். முன்பு என் சரீரத்தில் ...லனில்லாதிருந்தது. வேலை செய்ய ...யாதபடி பல நோய்கள் எனக்கு இருந்தன. ...ப்பொழுது இயேசு எனக்கு நல்ல சுகம் ...டுத்திருக்கிறார். என் பாவங்களை அறிக்கை ...ய்து இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக் ...ண்டேன். இப்பொழுது எனக்கு மன ...தானத்தையும் நிம்மதியையும் கொடுத்திருக் ...ார். வேலை செய்ய எனக்குப் பெலன் ...துள்ளார். என் தேவைகளை அவரே ...புதமாகச் சந்தித்துவருகிறார்.

இயேசு உங்கள் வாழ்கையிலும் ...புதங்களைச் செய்வார். உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பார். உங்கள் வாழ்க்கையைப் பரிசுத்தமாக்குவார். அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் தரும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கல்யாணி,
சிதம்பரம்.

இயேசு சுகம் கொடுத்தார்

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1 யோவான் 5:14).

என் தாயாருக்கு ஒரு விநோதமான வியாதி வந்தது. மருத்துவர்களாலும் மந்திரவாதிகளாலும் அவர்களுக்கு உதவிசெய்ய முடியவில்லை. அப்பொழுது அவர்கள் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டார்கள். அவரைத் தன் இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். சாகும் தருவாயில் இருந்த என் தாயாருக்கு இயேசு சுகம் கொடுத்தார். எங்கள் கிராமத்தில் உள்ள எல்லாரும் அதைக் கண்டு ஆச்சரியப் பட்டார்கள்.

அதுமுதல் நானும் என் குடும்பத்தில் உள்ளவர்களும் கிறிஸ்தவ ஆலயத்திற்குச் சென்றோம். இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டோம். இயேசு எங்களை அற்புதமாய் வழிநடத்திவருகிறார்.

நீங்களும் இயேசுவை ஏற்றுக் கொள்ளுங்கள். அவரால் சுகமாக்கமுடியாத நோய்கள் இல்லை. உலகம் தரக்கூடாத சமாதானத்தை அவர் உங்களுக்குத் தருவார். அல்லேலூயா! ஆமென்.

ஆனந்தி,
குண்டுமேடு.

சபையின் செய்திகள்

1. 2012, ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் ஐக்கியத்திலுள்ள சபைப் போதகர்களும், அப்போஸ்தல தலைமைச் சபையின் ஊழியரும் ஒருங்கிணைந்து கூடினர்.

துதி ஆராதனைக்குப் பின்னர், அப்போஸ்தல கிறிஸ்தவ சபை, பெரம்பூர் இணைப்பிலமைந்த போதகர் ஆடம் சாமுவேல் அவர்கள், பிலிப்பியர் 3:12 ஐ மையமாகக் கொண்டு, "ஊழியர்கள் தெய்வீக நோக்கங்களை உறுதியாய்ப் புரிந்துக்கொண்டு ஊழியஞ் செய்யவேண்டும்" என்றுள்ள தலைப்பில், நான்கு குறிப்புக்களைப் பேசினார்.

புறஜாதிகளைக் கர்த்தருக்குள் வழி நடத்துதல் (அப்போஸ்தலர் 9:15), மந்தையை மேய்த்துப் போஷித்தல் (யோவான் 21:15-17), பிசாசின் கிரியைகளை அழித்தல் (யாத்தி. 3:10), கர்த்தரிடத்தில் முழுமனதாய் அன்பு கூருதல் (அப்போஸ்தலர் 13:22) போன்ற நோக்கங்களுடன் ஊழியர்கள் ஊழியஞ் செய்யவேண்டும் என்று விளக்கினார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்பு மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் நலமுடன் முடிந்தது.

2. 2012, ஏப்ரல் திங்கள் 12 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், தலைமைச் சபை ஊழியர்கள் போதகரின் ஆலோசனைக்காகவும், சிறப்பு ஜெபத்திற்காகவும், ஆலய வளாகத்தில் கூடினர்.

போதகரின் ஆலோசனைக்குப் பின்பு, மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் இனிது கலைந்தது.

NEWS

தீவிரவாரத்தை ஒடுக்க இணைந்து செயல்படுவோம் என்று பிரதமர் உறுதி

மாநில அரசுகளுடன் இணைந் தீவிரவாரத்தை அடக்க மத்திய அ உறுதியான நடவடிக்கை எடுக்கும் என் முதல்வர்கள் மாநாட்டைத் தொடங்கிவை பிரதமர் மன்மோகன்சிங் பேசினார். மாநி அரசுகளின் அதிகாரத்தில் குறுக்கிடும் நோ மில்லை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

கடந்த ஓராண்டில் உள்நாட் பாதுகாப்பு நிலைமை திருப்திகரமாக உள் ஆனாலும், தீவிரவாதிகள், நக்சலைட்டுகள், ம அடிப்படைவாதிகளால் இந்தியாவுக் தொடர்ந்து ஆபத்து உள்ளது. இந்தச் சவா களைச் சமாளிக்க எப்போதும் விழிப்புட இருக்கவேண்டியது அவசியம் என்றும், தீவி வாதிகளின் கொள்கை என்ன என்று அறிந் உள்நாட்டுத் தீவிரவாதம், வெளிநாட்டுத் தீவி வாதம் என்று வேறுபாடு பார்க்காமல் ஒட் மொத்தமாக அதனை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூறினார்.

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் ந ஓய்வு எடுக்கமுடியாது என்றும், அண்டை நாடுகளில் ஏற்பட்டுள்ள நிலையற்ற தன்மை களால் தீவிரவாதத்துக்கு எதிரான நம கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவேண்டு என்றும், தீவிரவாரத்தை ஒடுக்குவதில் மாநி அரசுகளுடன் இணைந்து செயல்பட மத்தி அரசு தயாராக உள்ளது என்றும், இவ்விஷத்தி மத்திய அரசு தன்னிச்சையாக செயல்பா என்றும் அவர் கூறினார்.

(தினகரன் 17-04-2012

My times are in His hands

My times are in that Mighty Hand
That formed the earth, the moon and stars,
That measured oceans, heaven spanned,
And for the sea set doors and bars.

Why should I fear what man can do
When in that Hand I rest secure?
In life or death, 't will bear me through;
There I have shelter, safe and sure.

My times are in my Father's Hand
How could I wish or ask for more?
For He who has my pathway planned
Will guide me till my journey 's o'er.

Reg.Number TN/CCN/385/2012-2014. Licence to the post under WPP No.TN/CCN/85/2012-2014
Reg. Under Regis. of News Paper for India No.1295/57, Posting date 29th & 30th of every month
Date of Publication: Monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrika Channel, Egmore, Chennai - 600 008.

Book - Rs.5/-

1. விசுவாசிகளின் சாட்சி
2. சாட்சிகள் 60
3. உத்தம சாட்சிகள்
4. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
5. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
6. ஆவிக்குரிய வேத சத்தியங்கள்
7. தசமபாகம் கர்த்தருக்கு உரியன
8. Jesus met me in jail
9. Tithe belongs to the Lord
10. Spiritual truths from the Bible
11. My experiences

Book - Rs.10/-

12. கர்வாலி மரம்
13. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
14. கிறிஸ்துமஸ் செய்திகள்
15. இயேசு உயிர்த்தெழுந்தார்
16. நீதியின் சூரியன்
17. பரதேசிகளாகிய நாம்
18. நித்திய பிரதான ஆசாரியர்
19. சபை சபைதானா?
20. சிலுவைக்கு அப்பால்
21. வணக்கம்
22. ஜீவனுள்ள சாட்சிகள்
23. அற்புத சாட்சிகள்
24. சாட்சிகள்
25. நன்றியுள்ள சாட்சிகள்
26. கல்லூரியில் அற்புதங்கள்
27. நற்செய்தி கதைகள்
28. தீப ஒளி
29. அந்தக் கடிதங்கள்
30. அந்த மயில்கள்
31. கனமான ஊழியம்
32. வெளிச்சம்
33. ஆத்தும நேசர்
34. ஐக்கியம்
35. கொடி
36. இன்னும் சந்தேகமா?
37. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
38. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
39. முதலாம் ஆதாம்
40. ஆசீர்வாதங்களின் திறவுகோல்.
41. நீரே என் மேய்ப்பர்
42. தேவ ஊழியம்
43. Eternal grace
44. The Star
45. The new year
46. Spiritual questions
47. The timely warning
48. The blessing
49. Your response to the Cross
50. Springs in the valley
51. A narrow escape from hell

Book - Rs.15/-

52. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
53. அதிசயமான தேவ கிருபை

Book - Rs.20/-

54. வாக்குத்தத்தச் செய்திகள் 2004
55. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-1
56. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-2
57. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-4
58. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
59. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
60. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-1
61. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-2
62. ஒருவருக்கொருவர்
63. கர்த்தருக்குப் பரிசுத்தம்
64. Successful ministers of the Lord
65. Messages of God's blessings-Part 1
66. Messages of God's blessings-Part 2

Book - Rs.25/-

67. வாக்குத்தத்தச் செய்திகள் 200
68. வாக்குத்தத்தச் செய்திகள் 200
69. வாக்குத்தத்தச் செய்திகள் 200
70. வாக்குத்தத்தச் செய்திகள் 200
71. வாக்குத்தத்தச் செய்திகள் 200
72. வாக்குத்தத்தச் செய்திகள் 201
73. வாக்குத்தத்தச் செய்திகள் 2011
74. வேத ஒழுங்கின்படி தேவ ஊ
75. வேத ஒழுங்கின்படி தேவ ஊ
76. வேத ஒழுங்கின்படி தேவ ஊ
77. தேவனுடைய ஆசீர்வாதங்க பெற்றுக்கொள்ளுங்கள்
78. ஜெபத்தின் வல்லமை
79. கிறிஸ்துமஸ் செய்திகள் (பகு
80. A good soldier of Jesus Christ

Book-Rs.30/-

81. நல்ல போர்ச்சேவகன்
82. ஆவிக்குரிய தேவசெய்திகள்
83. வேதாகமத்திலிருந்து எடுக்கப் முத்துக்கள் (பகுதி-1)
84. Gleanings from the Bible (Pa
85. வேதாகமத்திலிருந்து எடுக்கப் முத்துக்கள் (பகுதி-2)
86. Gleanings from the Bible (Pa
87. வாக்குத்தத்தச் செய்திகள் 2011
88. கிறிஸ்துவின் சிலுவை மரண மற்றும் உயிர்த்தெழுதலின் செ

Book-Rs.100

89. உன்னதப்பாட்டு (வேதபாடம்)
90. வெளிப்படுத்தின விசேஷம் (வேத
92. The Revelation (Bible Study)
92. விடுதலைத் தூதன் ஆண்டுப் (ஜனவரி முதல் டிசம்பர் வரை) (2009, 2010, 2011)

24 Hrs. Prayer Line
26625815

Herald of Deliverance

Edited and published by Pastor M.K Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622775 Website: www.acalivechurch.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007
Phone: 26622021 e-mail: acalm@acalivechurch.org
Printed by Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026, Phone: 24728885/Cell:9841429070